செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 195 நாள்: 6/4/18

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

### செய்திக் குறிப்பு

முதன்மை நிலை விளையாட்டு மைய விடுதிகளில் சிறுவர் / சிறுமியர் சேர்க்கை 2018–2019

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக பள்ளிகளில் பயிலும் சிறுவர் / சிறுமியர்களுக்கு விளையாட்டுத் துறையில் சாதனைகள் படைப்பதற்கு ஏற்ப நல்ல பயிற்சி, தங்குமிட வசதி மற்றும் சத்தான உணவுடன் கூடிய 5 முதன்மை நிலை விளையாட்டு மைய விடுதிகள் பின்வரும் இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

சிறுவர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மைய விடுதி – சென்னை, திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

சிறுமியர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மைய விடுதி –சென்னை மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

மேற்காணும் முதன்மை நிலை விளையாட்டு மைய விடுதிகளில் உள்ள பின் வரும் காலியாக உள்ள விளையாட்டுகளில் பயிற்சி பெற்று சிறந்த விளையாட்டு வீரர் / வீராங்கனையராக விளங்குவதற்கு 6–ம் வகுப்பு, 7–ம் வகுப்பு, மற்றும் 8–ம் வகுப்பு ஆகிய வகுப்புகளில் சிறுவர் / சிறுமியர்களுக்கான மாநில அளவிலான தேர்வு வரும் 11.05.2018 அன்று காலை 8.00 மணிக்கு சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் நடைபெற உள்ளது.

<u>சிறுவர்களுக்கான விளையாட்டு</u>

1. தடகளம் 2. இறகுப்பந்து 3. டேக்வோண்டோ 4. குத்துச்சண்டை 5. ஜிம்னாஸ்டிக்ஸ் 6.டென்னிஸ் மற்றும் 7. நீச்சல்

<u>சிறுமியர்களுக்கான விளையாட்டு</u>

1. தடகளம் 2. இறகுப்பந்து 3. மேசைப்பந்து மற்றும் 4. ஜிம்னாஸ்டிக்ஸ்

விளையாட்டில் சிறந்து விளங்கும் மற்றும் ஆர்வம் உள்ள மாணவ / மாணவியர் 2018–2019 ஆம் ஆண்டு சேர்க்கைக்கு உரிய படிவங்களை 30.03.2018–ஆம் தேதி முதல் மாவட்ட விளையாட்டு அலுவலகம்,நேதாஜி விளையாட்டு அரங்கம் வேலூர் விளையாட்டு அலுவலர் அவர்களை அணுகி இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். அல்லது www.sdat.tn.gov.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். தேசிய மற்றும் மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விளையாட்டு விடுதிகள் தொடர்பான விவரங்களை www.sdat.tn.gov.in என்ற இணைய தள முகவரியில் தெரிந்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 11.05.2018 தேர்வு அன்று காலை 8.00 மணிக்குள் நேரில் மாநிலத் தேர்வு மையத்தில் சமர்ப்பிக்க வேண்டும்

வேலூர்–9.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர்.